மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அது தனிச் சலுகையின்பாற்படும். இது மத்திய அரசாங்கம் வகுத்துத் தந்திருக்கிற திட்டத்தை மாநில அரசு நடைமுறைப்படுத்துகிற திட்டமாகும். அதுபற்றி விவரம் வேண்டுமானால், தனிக் கேள்வி போடவும்.

வெள்ளக்கோவில் ஒன்றியப் பள்ளிகளில் ஆசிரியர்கள்.

*432 வினா—திரு. மு. பழனிசாமி : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1972–73-ம் கல்வி ஆண்டில், வெள்ளக்கோவில் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் எத்தனை இடைநிலை ஆசிரியர் பதவிகள் முதுநிலைப் பதவிகளாகத் தரம் உயர்த்தப்பட்டன ?

(இ) அப்பதவிகளுக்கு உரிய காலத்தில் ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டனரா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) இரண்டு பணியிடங்கள்.

(இ) ஆம்.

கும்மிடிப்பூண்டி உயர்நிலைப்பள்ளி.

*433 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்மிடிப்பூண்டி அரசினர் உயர்நிலைப்பள்ளிக்கு இட வசதியைப் பெருக்கும்பொருட்டு புதிதாக ஆறு வகுப்பறைகள் கட்டுவதற்கான திட்டம் காலதாமதப்படுவதன் காரணம் என்ன ?

(இ) எப்போது அவை கட்டி முடிக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) & (இ).—

கும்மிடிப்பூண்டி அரசினர் (கழக) உயர்நிலைப்பள்ளிக்காக ஆறு அறைகள் கட்டும் நோக்குடன் ரூ. 1,07,000 மதிப்பீட்டில் முன்னதாக திட்டம் தயாரிக்கப்பட்டது. நிதிப்பற்றாக்குறையினால் ரூ. 36,000 மதிப்பீட்டில் துணைக்கட்டிடம் கட்டலாமென்று தீர்மானித்து, சைதை முதன்மைக்கல்வி அலுவலர் அதற்கான வரைபடமும் மதிப்பீடும் அனுப்பியுள்ளார். அவை அரசின் பரிசீலனையில் உள்ளன.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, இந்த உயர்நிலைப் பள்ளியில் அதிகமான மாணவர்கள் வகுப்பில் படிக்காமல், வெட்ட வெளியேயிருந்து படிக்கின்ற காரணத்தால், குறைக்கப்பட்ட தொகையை யாவது உடனடியாக ஒதுக்கி, கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ரூ. 36,000 செலவில் கட்டிடம் கட்ட ஒரு பிரேரணை வந்திருக்கிறது. அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் முடிவு எடுக்கப்படும்.

Symposium on ground water

*** 434 *Q*. THIRU R. R. MUNUSAMI : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—**

(*a*) whether any International Symposium on Development of Ground Water Resources was held at Madras during November 1973, and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) & (இ) நிலத்திற்குக் கீழே புதையுண்ட நீரின் வளம் பற்றிய அனைத்து நாட்டு கருத்தரங்கு ஒன்று 1973-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 26-ம் நாளிலிருந்து 29-ம் நாள் வரை கிண்டி பொறியியல் கல்லூரியில் நடந் தேறியது. இக்கருத்தரங்கு நில நீர் துறையில் பணியாற்றும் பல்வேறு அறிவியல், புவியியல் வல்லுநர்களையும் ஒருமிக்கக்கூட்டி நிலநீர் வளத் தைப் பயன்படுத்துவதில் அவர்கள் எதிர்நோக்கிய பல்வேறு சிக்கல்களை விவாதிக்க உதவியதோடு இப்பொருள் பற்றிய தற்போது நிலவிவரும் புதிய கருத்துக்களை அறியவும் உதவிற்று. இதையொட்டி ஒரு பொருட்காட்சியும் நடைபெற்றது.

திரு. எம். சுரேந்திரன் : சார், நிலத்திற்குக் கீழுள்ள நீரைக் கொண்டு வருவது பற்றிய கருத்தரங்கின் காரணமாக நம்முடைய மாநிலத்திற்கு எந்த அளவிற்கு, என்னவிதமான பயன்கள் கிடைத்திருக்கின்றன ? நம் முடைய மாநிலத்தைப்பற்றி ஏற்கெனவே ஆராயப்பட்டு, நிலநீர் சம்பந்த மாக ஒரு முடிவை அரசாங்கம் எடுத்திருப்பதாகத் தெரிகிறதே, அதற்கு ஊக்கம் அளிக்கின்ற வகையிலே, அதை இன்னும் விரைவுபடுத்துகின்ற வகையிலே இந்தக் கருத்தரங்கு அமைந்திருந்ததா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்தக் கருத்தரங்கு 3, 4 நாட்கள் நடைபெற்று மிகப் பயன் அளித் துள்ளது என்றுதான் குறிப்பு உள்ளது. பல்வேறு நாடுகளைச் சேர்ந்த